S. Nadarajah
Publisher

விலை சதம் 5

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு. கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு. கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

நாமார்க்கும் குடியன்றோம்

பக்கங்கள் 6 | கொழும்பு, சனிக்கிழமை ஐப்பசி 13உ (வியாழக்கிழமை) | Colombo, October 30 1947 | மலர் 1948 | விலை 5 | எண் 149

கீழ்நாட்டுக் கலை உயர அரசாங்கத் திட்டம்

இரு பிரிவேனாக்கள் சேர மறுக்கின்றனர்

கொழும்பு, அக். 29

இலங்கையில் உள்ள கீழ்நாட்டுக் கலாமன்றங்களுள் முக்கியமான வித்யோதய, வித்யாலங்காரப் பிரிவேனாக்கள் அரசாங்கத்தின் பிரிவேனாக் கல்விக் கிட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன

பிரிவேனாக் கல்வியின் தரா தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இக்கிட்டம் கடந்த அரசாங்க சபையின் அந்திய காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை-இந்தியர் பிரச்னை

டில்லி மகாநாட்டுக்கு திரு. தேசாய் விஜயம்

காந்திஜியைச் சந்தித்துப் பேசினார்

புதுடில்லி, அக் 28

இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக சங்கம், இலங்கை இந்தியன் காங்கிரஸ் இவைகளின் காரியதரிசியாயிருந்த திரு எச். எம் தேசாய் இப்பொழுது ஆசியா தொழில் மகாநாடு சம்பந்தமாக இங்கு வந்திருக்கிறார். அவர் இன்று மகாத்மா காந்தியைச் சந்தித்து இலங்கையிலுள்ள இந்தியர் நிலைமையைப் பற்றி எடுத்துரைத்தார் திரு. தேசாய் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியா இப்பொழுது சுதந்திர நாடாகி விட்டபடியாலும் இலங்கையும் கூடிய சீக்கிரம் டொமினியன் அந்தஸ்தை அடையப்போவதாலும் இலங்கையிலுள்ள ஏழாயிரம் லட்சம் இந்தியர்களின் வாக்குரிமை பிரஜா உரிமை சம்பந்தமாக இரு அண்மை நாடுகளுக்குமிடையே நிரந்தரமான ஒப்பந்தம் ஏற்பட சந்தர்ப்பம் வாய்த்துள்ளது இலங்கையில் உரிமைகளை அனுபவிக்க விரும்பும் இந்தியர்கள் இலங்கையின் பிரஜா உரிமையை அடைய வேண்டும். அவர்கள் இந்தியாவிலுள்ள பிரஜா உரிமையுள்ளவர்களாக இருக்க விரும்பல காது. அவர்கள் இலங்கையையே தங்கள் தாயகமாகக் கொண்டு இலங்கையின் நலன்களுக்காகப் பாடுபடுகிறார்கள் எனபதை நாசுப்பித்துக் காட்ட வேண்டும். இலங்கை இந்தியர் பிரச்னையில் இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதியாக இருக்கும் திரு. வி வி கிரி மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறார். அதனால் இனனும் இரண்டு மூன்று மாதங்களில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள பிரச்னைகள் சுமுகமாகவும் நிரந்தரமாகவும் தீர்க்கப்பட்டுவிடும். (அ-பிரஸ்)

புதிய சுப்ரீம் கோர்ட் நீதிபதி

திரு. பஸ்நாயக்கா நியமனம்

கொழும்பு, அக் 29

பிரதம நீதியரசர் முன்னிலையில் இன்று காலை திரு. எச். எச். பஸநாயக்கா கே.சி. கவர்களை விசுவாச பிரமாணம் செய்து சுப்ரீம் கோர்ட் நீதியரசர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானுக்கு பிரிட்டிஷார் ஓட்டம்

நேரு-ஜின்னா சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது

துருக்கி குடியரசுக் கொண்டாட்டத்திற்கு பாகிஸ்தான் தூதர் விஜயம்

புதுடில்லி, அக். 29

இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு தேக சௌகரியக் குறைவு ஏற்பட்டிருப்பதால் இன்று லாகூரில் பாக்கிஸ்தான் தலைவர்களைச் சந்தித்துப் பேச அங்கு அவர் செல்லமுடியவில்லை. இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனுக்கும் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுக்கும் பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னாவும் பாக்கிஸ்தான பிரதம மந்திரி லியாகத் அலிகானும் லாகூருக்கு வந்து கலந்து பேசும்படி அழை புனுடபியிருந்தார்கள். இந்த சந்திப்பால் முக்கியமான விளைவுகள் ஏற்படுமென்றுஎதிர்பார்க்கப்பட்டது. காஷ்மீர் பிரச்னை பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுவதாக இருந்தது இப்பொழுது பண்டித நேரு போக முடியாதிருப்பதால் அவரின்றி லார்டு மவுண்ட் பேட்டன் தனித்துப் போவதற்கில்லை

இப்பொழுது கராச்சியிலிருந்து லாகூருக்கு வந்து தங்கியிருக்கும் ஜனாப் ஜின்னா, காஷ்மீர் சம்பந்தமாக மேற்று நடைபெற்ற பாகிஸ்தான மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

மேலும் துருப்புகள்

டில்லியிலிருந்து மேற்று மேலும் அநேக விமானங்கள் துருப்புகளையும் ஆயுதங்களையும் ஏற்றிக்கொண்டு ஸ்ரீநகருக்குச் சென்றன.

பாகிஸ்தான் உணவு மந்திரி அறிக்கை

லாகூர், அக். 29

பாகிஸ்தான் உணவு மந்திரியும் அகதிகள் மந்திரியுமான கஸ்னுபர் அலிகான் பின்வருமாறு தெரிவித்தார்:- காஷ்மீர் மக்கள் காஷ்மீரம் பாகிஸ்தானில் சேருவதை விரும்புகிறார்கள். காஷ்மீர் சர்க்காரும் இந்திய சர்க்காரும் சூழ்ச்சி செய்து ஜனநாயக முறைக்கு விரோதமாக காஷ்மீரை இந்தியா ஆக்கிவிட்டன. சோதனையிலிருக்கிறார்கள்.

ராவல்பிண்டிக்கு பிரிட்டிஷார் ஓட்டம்

ஸ்ரீநகரிலுள்ள அநேக பிரிட்டிஷார் (குழந்தை குட்டிகளுடன் பாக்கிஸ்தானிலுள்ள ராவல்பிண்டிக்கு விமானங்கள் மூலமாக வெளியேறிச் சென்றார்கள் காஷ்மீரிலிருந்து வெளியேற விரும்பும் பிரிட்டிஷ்காரர்களனைவரையும் வெளியேற்றிக் கொண்டு போக நாளை 15 ஆகாய விமானங்கள் வேலை செய்யும் சிம்லாவிலிருந்து 157 பிரிட்டிஷாரும், முசோரியிலிருந்து 15 பேர்களும் கிழக்கு பஞ்சாப்பிலுள்ள அமிர்தசரஸிலிருந்தும் டல்ஹௌஸியிலிருந்தும 21 பேர்களும் வெளியேறி விட்டார்கள்.

மவுண்ட் பேட்டனுக்கு புதிய பட்டம்

லண்டன், அக். 28

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்ட் மவுண்ட் பேட்டனுக்கு 'பிரிட்டிஷ் மன்னர் 'பாரன்' பட்டம் வழங்கியிருக்கிறார். லார்டு மவுண்ட் பேட்டனுக்கு புகழ் இனிமேல் போஸுல் அவருக்குப் பின் அவருடைய பட்டம் அவருடைய மூத்த புத்திரியான ஸ்ரீமதி பிராபோனுக்குச் சேரும்

பலம் பொருந்திய இந்தியா

லண்டன், அக். 28

இந்தியா ராணுவத்தின் உப தலைவரான மேஜர் ஜெனரல் காரியப்பா, இந்தியா ஹைகமிஷனர் அளித்த விருந்துக் கூட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியா பலம் பொருந்திய ராணுவத்தை அமைத்து உலகில் பெரிய நாடாக விளங்க வேண்டும். இந்திய ராணுவ வீரர்கள் உலகெங்கும் தங்கள் கீர்த்தியை நாட்டியிருக்கிறார்கள். எங்கள் போர்த் தந்தனை உலக முழுதும் நன்றியுடன் எங்களை நாட்டை உலகில் மிகவும் பலம் பொருந்திய நாடாக்க எங்களால் முடியும்.

அந்தோ! இப்பொழுது எங்கள் நாடு பிளவுபட்டிருக்கிறது ஆனால் ராணுவ வீரர்களாக எங்கள் கூட்டத்தார் இரு பிரிவுகளையும் ஐக்கியப்படுத்துவோம். அரசியலைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை. பலம் பொருந்திய ராணுவத்தை ஏற்படுத்த வேண்டும

ஜப்பானில் இந்திய துருப்புகள்

ஜப்பானிலுள்ள இந்திய துருப்புகளில் மீதமுள்ள 130 பேர்களும் ஞாயிற்றுக்கிழமையன்று இந்தியாவுக்குப் புறப்படுவிட்டனர். இவர்கள் கப்பலில் சிங்கப்பூரை அடைந்ததும் சென்னை செல்லும் கப்பலுக்கு மாற்றப்படுவார்கள்.

டாக்டர் ராய்

ஐக்கிய மாகாண கவர்னராக நியமிக்கப்படுவுள்ள டாக்டர் பி. சி. ராய்க்கு இன்று இந்தியா மாளிகையில் பெரிய வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. பிரிட்டிஷ் மந்திரிகள் பிரிட்டனிலுள்ள பிரபல இந்தியர்கள் யாவரும் வந்திருந்தனர் நாளை அவர் கல்கத்தாவுக்குப் பயணமாகிறார்

துருக்கியில் பாகிஸ்தான் தூதர்

இஸ்தான்புல், அக் 28

ஜனாப் ஜின்னாவின் விசேஷ தூதராக மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து வரும் ஸர். பிரோஸ் கான் நூன் இன்று அங்காராவுக்குப் பயணமானார். நாளை அங்கு நடைபெறும் துருக்கி குடியரசு கொண்டாட்ட விழாவில் கலந்துகொள்வார். அவர் புறப்படும் சமயம் பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:--

எதிர்கால உலகத்தில் ஏற்படவிருக்கும் முஸ்லிம் நாடுகளின் அகில தகில் துருக்கி பிரபலமாக விளங்கும். பாகிஸ்தானில் கம்யூனிசம் வேரூன்ற முடியாது.

பாராளுமன்ற அங்கத்தவரின் அபீலுக்கு நிதி திரட்ட முயற்சி

கொழும்பு, அக் 30

திரு. ஈ. எப். எஸ். கிரேஷியனும் இன்னும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கு கவர்னரால் நியமிக்கப்பட்ட ஒருவரும், அடுத்த நவம்பர் மாதம் 9-ம் தேதி விமானத்தில், அவிசாவளைப் பிரதிநிதி, திரு. டி. பி. ஆர். குணவர்த்தனுவின் "பிரிவிகவுன்ஸில்" அபீலில் சம்பந்தமாக இங்கிலாந்திற்குச் செல்லுவார்களென அறியப்படுகிறது.

பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொள்ள திரு குணவர்த்தனுவுக்கு அனுமதியளிக்கப்பட்டால் திரு. டி என். பிரிட்கே. ஸி. அவர் சார்பாக ஆஜராவார். திரு கிரேஷியன் அவருக்கு உதவியாக இருப்பார் இவ்விருவருடன் ஸர். ரெஜ் பஹாதூர் சம்பந்தனின் மருமகனாகிய திரு ஆர் ஜே ஜயவர்தனவும் திரு குணவர்த்தனுவுக்காக பிரிவிகவுன்ஸிலில் வாதஞ் செய்வாராம்.

இதற்குத் தேவையான நிதியொன்றை பழைய அரசாங்க சபை அங்கத்தவர் கிய திரு. பி. எச் அலுவிஹாராவும், பழைய ரப்பர், ஸ்தாபிக கமிஷனர் திரு பி. சரவணமுத்துவும், தோட்டத் துரை திரு ஏ கோர்டன் புறூக்கும், பிரபல வர்த்தகர் திரு ஏ மாமூஜியும் ஆகியவர்கள் நிதி திரட்டுவதாகஅறியப்படுகிறது.

அந்நிதிக்குப் 'பிரிவி குணவர்த்தனு அப்பீல் நிதி" என்று பெயரிடப்படுகின்றனர். அதன் பொக்கிஷதார் கொழும்புவிலுள்ள ஞாபர் பிளேஸ்லுள்ள திரு டி வி விஜயவர்தனு ஆவர் என்றும் கூறப்படுகிறது.

திரு. ஜெயரத்னம் கொழும்பு விஜயம்

இந்திய சம்பந்தன் ரேதம மந்திரியாக இருந்த இலங்கைத் தமிழர்

கொழும்பு, அக். 29

இந்தியாவில் ஐ சி எஸ். அதிகாரியாக 28 வருட காலமாக வேலை செய்து வரும் இலங்கையரான திரு டி. சி. எஸ் ஜெயரத்னம் விடுமுறையில் இப்பொழுது இங்கு சில தினங்கள் தங்கியிருக்க வந்திருக்கிறார். இவர் 18 மாத காலம் ரீவா சமஸ்தானத்தின் பிரதம மந்திரியாக இருந்தார். இப்பொழுது மத்திய மாகாண சர்க்காரின் நிர்க்கமிஷனராக பதவி வகித்து வருகிறார்.

அட்வகேட்டின் தொப்பி களவாடப்பட்டது

கொழும்பு, அக். 29

டாம்வீதியில் காரை நிறுத்திவிட்டு அருகேயிருந்த ஒரு புத்தக சாலைக்குள் சென்று திரும்பிய அட்வகேட் திரு. வி. சரவணமுத்துவின் ரூ 40 மதிப்புள்ள தொப்பி காரில் காணப்படவில்லையென்றும் அவர் புறக்கோட்டை போலிஸ் ஸ்டேஷனுக்குச் செல்லுகையில் அத்தொப்பியை ஒருவர் அணிந்து செல்வதைக் கண்டாரெனறும் கூறப்படுகிறது இதுசம்பந்தமாக கொச்சக்கடையைச் சேர்ந்த எச் அல்பாட் பெரேரா என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியை ரூ 500 பிணையில் போகுமாறு விடுத்து வசந்த பிணையை நவம்பர் 11-ம் தேதி கூடுமாஜிஸ்டிரேட் ஒத்திவைத்தார்.

விலக்கப்பட்டிருந்த ஐவர் வேலைக்குத்திரும்ப அனுமதி!

மற்றும் 36 அரசாங்க ஊழியர் மீது நடவடிக்கைகள் ரத்து!

வேலைநிறுத்தர் செய்த அரசாங்க குமாஸ்தாக்கள் பற்றி மந்திரிசபை முடிவு

(நமது அரசியல் நிருபர்.)

கொழும்பு, அக். 29

நேற்று மந்திரிசபையின் விசேஷ கூட்டம் ஒன்று நடைபெற்றதாக அறியப்படுகிறது.

இக் கூட்டத்தில், சென்ற ஜூன் மாதத்தில் அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தஞ் செய்தபோது அதில் முக்கியமாகப் பங்குபற்றியதன் காரணமாகசிலர் அரசாங்கத்தால் அவர்கள் வேலைகளினின்றும் கடமையாற்றாது இப்பொழுது தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருப்பவர்களை மீண்டும் வேலைக்கு அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதா என்னும் பிரச்னை ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆலோசனை முடிவில் வேலையினின்றும் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருப்பவர்களை மீண்டும் வேலைக்கு அழைத்துக் கொள்ளுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதாம். ஆகவே கீழே குறிக்கப்படும் ஐவரும் மீண்டும் தம் பதவிகளில் அமர்த்தப்படுவாரென எண்ணப்படுகின்றது.

1. திரு. டபிள்யூ. ஏ. டீ. சில்வா, (அளப்பனவு இலாகா குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி)
2. திரு. ஜே. ஈ. ஏ. மோட்டிமர், (சுருக்கெழுத்து குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி)
3. திரு. பி. பாக்கியநாதன், (வருமானவரி இலாகா குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி)
4. திரு. எம். காசிநாதன், (தபால் இலாகா குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி)
5. திரு. எஸ். வன்னியசிங்கம், (அரசாங்க பொதுக்குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி,

இன்னும் 36 அரசாங்க ஊழியர்மீது வேலைநிறுத்தஞ் சம்பந்தமாக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டிருந்தது. இவர்கள்மீதும் ஒருவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லையென மந்திரிசபை தீர்மானித்துள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர் நிலைமையை ஆராயவேண்டும்

ஆசியா நாடுகளின் தொழிலாளர் நலன் அபிவிருத்தியும் கைத்தொழில் உற்பத்திப் பெருக்கமும்

மகாநாட்டுத் தலைவர் பிரசங்கம், இந்திய சர்க்கார் தீர்மானங்கள், மூன்று கமிட்டிகள் நியமனம்

புதுடில்லி, அக் 28

ஆசியா தொழிலாளர் மகாநாடு இன்று மீண்டும் கூடியது மகாநாட்டுத் தலைவரான இந்தியா தொழில் மந்திரி ஜக ஜீவன்ராம் தலைமை பிரசங்கம் நிகழ்த்தியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆசிய நாடுகளில் பெரும்பாலான தொழிலாளர்கள் நிலங்களில் பாடுபடும் விவசாயிகளே சர்வ தேச தொழில் ஸ்தாபனத்தில் ஆசிய விவசாயத் தொழிலாளர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும். ஆசிய நாடுகளின் கைத்தொழில் உற்பத்தி பற்றி மகாநாடு அதிகமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவது பற்றியும் உற்பத்திப் பொருட்கள் எல்லா மக்களுக்கும் சரிசமானமாகக் கிடைக்கும் வழிகள் பற்றியுமான பிரச்னைகளை மகாநாடு நன்கு ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

தொழிற் கொள்கை வகுப்பதுபற்றி ஆராயவும், திட்டங்களை நிறைவேற்றி வைக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைபற்றி ஆராயவும தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பது சம்பந்தமான பிரச்னைகளை ஆராயவும் மகாநாடு மூன்று கமிட்டிகளை நியமித்தது.

(1) இவ்விதம் மூன்று கமிட்டிகளடங்கிய ஆசியா தொழில் பகுதியின் காரியாலயம் ஆசியாவில் நிறுவப்பட வேண்டுமென்று இந்திய சர்க்காரால தயாரிக்கப்பட்ட தீர்மானம் மகாநாட்டில சமர்ப்பிக்கப்பட்டது. மூன்று அமசங்களைக் கொண்ட இந்த ஆசியா தொழில ஸ்தாபன நிர்வாகக் கமிட்டி சர்வ தேச தொழில் ஸ்தாபனத்தின் அமைப்புக்குட்பட்டு வேலை செய்யும். ஆசியா தொழிலாளர் வாழ்க்கைத் தரத்தை சர்வதேச தொழிலாளர் வாழ்க்கைத் தரத்திற்கிணங்க உயர்த்துவதுபற்றி எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை இக் கமிட்டி தயார் செய்யும். ஆசிய நாடுகளிலுள்ள தொழிலாளர் நிலைமைகளைப் பற்றி தகவல்களையும் புள்ளி விபரங்களையும் சேகரித்து அவைகளை ஆசியாவின் சுதேச பாஷைகளில பிரசுரம் செய்யும் ஆசியா தொழிலாளர் பிரச்னை சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதிலும் அறிக்கைகள் தயாரிப்பதிலும் ஆசியா பகுதி தொழிலாளர் மகாநாட்டையோ அல்லது மற்றுந்தப் பகுதிகளின் மகாநாடடையோ கூட்டுவது பற்றியும் ஆசிய தொழில ஸ்தாபன நிர்வாகக் கமிட்டி சர்வ தேச தொழில ஸ்தாபனத்திற்கு உதவி செய்யும்

(2) இந்தியசர்க்கார் கொண்டு வந்த மற்றொரு தீர்மானம் பின்வருமாறு:- ஆசியா தொழிலாளர்கள் தகுந்த சம்பளம்பெறுவதற்கு உறுபத்திகளைபெருக்குவதற்கு ஆசிய நாடுகளுக்குத் தேவையான சாதனங்களான பண உதவி, இயந்திர உதவி, மற்றும் முக்கியமான சாமான்கள் இவைகளைப் பெறுவதற்கு சர்வதேச தொழில ஸ்தாபனம் உதவி செய்ய முன்வர வேண்டும்

(3) ஆசிய நாடுகளின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, ஆசிய தொழிலாளர்களுக்கு திறமைபாகப் பயிற்சிக்கு எவ்வளவு தொழிலாளர்கள தேவையென்பதையும்-, போதிய அளவில படிப்படியாகப் பயிற்சி பெற எவ்வளவு தொழிலாளர்கள தேவையென்பதையும் இவைகளுக்காக சாத்யமானவரை எவ்வளவு தூரம் வசதி ஏற்படுத்த முடியுமென்பதையும் சர்வதேச தொழில் ஸ்தாபனம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

(4) சம்பளப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்து அதை அபிவிருத்தி செய்யவும் நிர்ணயம் செய்யவும், அதற்காக வேண்டிய சட்டங்களையும் நிர்வாக முறைகளையும் வகுக்கவும், அதைப் பற்றி ஆராய தொழிலாளர்கள-முதலாளிகள் பிரதிநிதித்துவமுள்ள ஒரு சட்ட பூர்வமான போர்டு ஏற்படுத்தவும் வேண்டும்.

(5) நிலங்கள் சம்பந்தமான தொழிலாளர் பிரச்னைகளான நில அனுபவம், விவசாயிகளுக்கும் நிலச்சுவாந்தார்களுக்குமுள்ள சம்பந்தம், கூட்டுறவு விவசாயம் தோட்டத் தொழிலாளர் நிலைமை, ஜீவனத்தொழில, கைத்தொழில பயிற்சி, பெண் தொழிலாளர் நிலைமை ஆகியவைகளை சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்

உப தலைவர்கள்

நேற்று நடைபெற்ற மகாநாட்டுக் கூட்டத்தில், இந்தியா தொழில் மந்திரி ஜகஜீவன் ராமைத் தலைவராகத் தெரிந்தெடுக்கு பட சீன சர்க்கார் பிரதிநிதி ஹுவாகுவா தீர்மானத்தை பிரரேபித்தார் பாக்கிஸ்தான் முதலாளிகள் பிரதிநிதி கான் அதை ஆதரித்தார் இலங்கைப் பிரதிநிதி டி சொய்சா அதை ஆமோதித்தார். மகாநாடு ஏகமனதாக திரு ஜகஜீவன்ராமைத் தலைவராகத் தெரிந்தெடுத்தது.

பண்டித நேரு வரவேற்புப் பிரசங்கம் மிக உயர்தரமானதென்றும் ஊக்கமளிப்பதாக இருக்கிறதென்றும் சர்வதேச தொழில் ஸ்தாபன தலைவர் பாராட்டினார்.

நேற்று பிற்பகல் மகாநாடு கூடியபோது, கீழ்க் கண்டவர்கள் உப தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்:-

சர்க்கார் கோஷ்டிக்கு சீன சர்க்கார் பிரதிநிதியான ஹுவாகுவா உப தலைவர் முதலாளிகள் கோஷ்டிக்கு சிங்கப்பூர் முதலாளிகள் பிரதிநிதி எல். கிரசன் தொழிலாளர் கோஷ்டிக்கு பாகிஸ்தான தொழிலாளர் பிரதிநிதி டாக்டர் ஏ எம். மலிக்.

பொறுக்குக் கமிட்டி

மகாநாட்டு நடவடிக்கைகளை தயாரிக்க கீழ்க் கண்டவர்களடங்கிய பொறுக்குக்

(4-ம பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ச, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன: 3411.

சர்வதிந்த ஜூ ஐப்பசி மீ 13உ
வியாழக்கிழமை

சுதந்திரத்தின் உண்மை

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது இந்த சுதந்திரமும் நாட்டைப் பிளவுபடுத்திக் கிடைக்கபோகிலும், இப்பிளவினால் கொலை பாதகங்கள் நடைபெற்ற போகிலும், மக்கள் தங்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் சந்தோஷமாய் வாழலாம் என்பதும் எளியவனும், சாதாரண மனிதனும் சமத்துவமாய் வாழ்ந்து இதுவரையில் எதிர்பாராத நிலையை அடையலாம் என்பதையும் 2½ மாத காலத்திற்குள்ளாகக் காட்டிவிட்டது. இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொலை செய்து கொள்ளுகிறார்கள்தான். இவர்கள் இவ்வாறு படுகொலை செய்து கொள்ளத் தேவையில்லை. ஆனால் இந்தியாவானது மகாத்மாவின் புத்திமதியைக் கேட்காமல் இந்த சுயராஜ்யத் திட்டத்தைப் பலாத்கார முறையில் பெற முயற்சித்திருந்தால் இந்தியாவில் இந்தியரும் வெள்ளையரும் அடித்துக் கொண்டு மடிந்திருப்பார்கள். அவ்வாறு ஏற்படக்கூடிய கொலை அளவைவிட இது மிகக் குறைவெனவே எண்ண வேண்டும். ஆகவே, நாம் அவ்விஷயத்தைப் பெரிதாக எடுத்துப் பேசத் தேவையில்லை அந்நியர் ஆட்சியில் இருந்த காலத்தில் உண்ண உணவில்லாத ஏழைக் குடியானவர்கள் அந்நிய நாடுகளுக்கு சுமார் 30 லட்சம் பேர் கொண்டு போகப்படவில்லையா? 10 வருஷங்களுக்கொருதரம் வந்த பஞ்சங்களில் எவ்வளவுபேர் மண்ணோடு மண்ணாயிருக்கின்றனர். மேலே கூறிய காரணங்களால் மக்கள் இறந்தார்களே என்பதற்காக நாமாக அடித்துக் கொண்டு சாக வேண்டுமா என்ற கேள்வியேற்படலாம். நமக்குள் அடித்துக் கொள்ளப்படாது தான் அனால் பாகிஸ்தான் வேண்டும் என்று கொண்டுபோன முறை சரியில்லை. முறையில் சிறிது சாத்வீகம் இருந்திருந்தால் இவ்வளவு கோர சம்பவங்கள் ஏற்படஇடமில்லை.

இலங்கைக்கும் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்களாம். பூரண சுதந்திரம் பெப்ரவரி மாதம் கொடுக்கப் போகிறார்களாம். இந்தியாவில் இரத்தக்களரி இருப்பதுபோல் இலங்கையில் இரத்தம்சிந்தாமல் சுதந்திரத்தை திரு. சேனநாயக்கா கொண்டு வந்து விட்டதாக இந்நாட்டிலுள்ளோர் பிரமாதப்படுத்துகிறார்கள். அது உண்மையான சுதந்திரமா இல்லையா என்பதை இனித்தான் அறிய வேண்டும் வெள்ளையர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறும் சமயம், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களையும் இதர மக்களையும் பிரித்துச் சென்றார்கள் ஆனால் இலங்கையில் தமிழர்களைப் பற்றி யாதொரு விதத்திலும் அவர்கட்கு அரசியல் உரிமை சிங்களவர் கொடுக்கும் பிச்சையாக விருக்கும் நிலையில் செய்து போனார்கள்.

இந்த நிலைமையை தமிழர்கள் வெறுக்தார்கள். அவர்களது வெறுப்பைச் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் காட்டியுள்ளார்கள். சோல்பரிக் கூட்டத்தார்கள் சொல்லிய பிரகாரம் திரு. சேனநாயக்கா கூட்டத்தார்களும் நியாயமாக நடந்துகொள்ளவில்லை. அவர் வெள்ளையர்களுடைய பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டிருப்பதும் தமிழர்கள் அறியாத விஷயமல்ல. பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுக் கிடந்த தமிழர்கள் அவருக்குக் கிடைக்காமல் இல்லை. அவர்களைக்கொண்டு தங்கள் காரியங்களைக் கொண்டுபோகலாம் என்று தீர்மானித்து விட்டார். அது மாத்திரமன்று. அவருக்கும் அவருடைய கூட்டத்தாருக்கும் உள்ள எதேச்சாதிகார ஆசைக்கு அளவில்லாதிருக்கிறது மந்திரி சபையைக் கூட்டு முன்னர் சிங்கக் கொடி 70000ஐ அந்நிய நாட்டிலிருந்து தருவித்திருக்கிறார்கள் இதனின்றும் அறிந்துகொள்ளக் கூடியதென்ன? சிறுபான்மையோர் என்ற மக்கள் இந் நாட்டில் இருப்பதாகவே அவர்கள் எண்ணவில்லை. எதேச்சாதிகாரம் செலுத்தவேண்டிய இன்னு பிரபுவே தனது பாக்கிஸ்தான் கொடியில் வெள்ளை நிறம் கொண்ட பாகத்தைச் சேர்த்திருக்கிறார். இந்தியூனியன் காரர்களோ இந்துக்களுடைய கொடியாகச் செய்யவில்லை. இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றுமுள்ள சிறுபான்மையோருக்கும் அக் கொடியில் இடம் அளித்திருக்கிறார்கள் இம் மூன்று வகுப்பாரையும் ஆளுவது யார் என்பதை அறிவிக்கும் காரணமாக அசோக சக்கரவர்த்தியின் சக்கரத்தைக் காட்டியுள்ளார்கள் இது இவர்களுடைய பரந்த நோக்கத்தைக் காட்டவில்லையா? அது மாத்திரமா?

வங்காளக் கவர்னர் பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஓர் தமிழன். அதிலும், தமிழர்களில் 100 க்கு 3 பேர் அடங்கிய ஓர் சிறுபான்மைக் கூட்டத்தாரைச் சேர்ந்த பிராமணனை; அதாவது திரு. ராஜகோபாலாச்சாரியாரை. இவருடைய தியாகங்களையும் கருதாது சமீப காலத்தில் தென் இந்தியாவில் இவருக்கு விரோதமான கிளர்ச்சி ஏற்பட்டிருந்தும், அதையுங்கருதாது இவருடைய தியாகத்தையும், அரிய சேவைகளையும் கவனித்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் அத்துடன் நிற்கவில்லை. அவரை இராஜப் பிரதிநிதியாகவும் நியமனம் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்செய்தியைக் கேட்கும் ஒவ்வொரு தமிழன்மனத்திலும் சந்தோஷம் ஏற்படும். எவ்வளவு ஏழையாகவிருந்தாலும், எந்தவினத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் அவனும் சுதந்திர இந்தியாவில் அரசு புரியும் யோக்கியதையுள்ளவன் என்பதைகேட்டு ஆனந்தப்பார்கள் இலங்கை வாழ் தமழர்களின் மனோபாவம் எவ்விதம் இருக்கிறது. 30 மைலுக்கு அப்பாலுள்ள தமிழன் அடைந்துள்ள சுதந்தரத்தைப் பார் நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தையும் பார்! சிறுபான்மையோருக்கு இந்நாட்டில் இடமில்லை. அவர்கள் வாயைத் திறந்தால் "கத்தி"தான் என்பதைக் காட்டுவதுபோல் மந்திரி அதிகாரம் பெறுவதற்கு முன்பதாக சிங்கக் கொடிகளையும் தருவித்திருக்கிறார்களே என்ற ஏக்கம் கொண்டிருக்கிறான் எலாம் தமிழன் இந்நாட்டில் அடிமையாக இருப்பதா அல்லது தனது சகோதரன் அடைந்துள்ள சுதந்திரம்போல் பெற முயற்சிப்பதா என்ற பெரிய கேள்வியொன்று அவன் மனதில் எழுந்திருக்கிறது என்போம்.

அமெரிக்க சினிமாவைக் கட்டியாளச் சதி

கமியூனிஸ்டுகள் மீது புகார்

வாஷிங்டன், அக். 28

அமெரிக்காவில் உள்ள கமியூனிஸ்டுகள் சினிமா ஊழியர் சங்கம் ஒன்றைக் கைப்பற்றச் சதி புரிந்ததாகவும் அதன் மூலம் ஹோலிவுட் சினிமா உலகையே கட்டியாள முயன்றதாகவும் ஒரு சினிமாத் தொழிலாளர் சபைப் பிரதிநிதிய னாரு, பிரூவ் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கை விசாரணைக் கமிட்டி முன் குறிப்பிட்டார். இச்சதியில் சினிமாத் தொழில பகுதியில் ஒருவரும் கலைபகுதியில் ஒரு சினிமாக் கதாசிரியரும் ஆக இரு கமியூனிஸ்டுகள் தீவிரமாக உழைத்ததாகச் சொல்லப்பட்டது.

இது சம்பந்தமாக 41 வயது சினிமா ஆசிரியர் டால்டன் த்மபோ,'நீர்கமியூன்டார்'என்ற கேள்விக்கு பதிலளிக்க மறுத்து விட்டார். இதனால் அவர்மீது அமெரிக்க காங்கிரஸை அவமதித்ததாக ஓர் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

[ராய்ட்டர்]

வட இலங்கையில் நெசவுக் கைத்தொழில்

ரஷ்யாவிலிருந்துவந்த நெல் விதை

இந்தியாவில் ஏராளமாக உற்பத்திசெய்ய முயற்சி

சென்னை, அக். 27—

சிறிது காலமுன்பு ரஷ்யாவிலிருந்துவந்த ஓர் புதுமாதிரியான நெல் விதையை பட்டாம்பி கோயம்புத்தூர் சர்க்கார் பண்ணைகளில் பரீட்சார்த்தமாக விதைத்ததனால் மழையின்மையால் ஏற்படும் வரட்சி அதை பாதிக்காது என்று கூறப்படுகிறது. சர்க்கார் பண்ணைகளில் அது நன்றாக வளர்ந்து வருவதாகக் தெரிகிறது. இந்த புதுமாதிரியான நெல் விதையை இந்தியாவில் ஏராளமாக உற்பத்தி செய்வது பற்றி விவசாய இலாகா ஆராய்ச்சி செய்து வருகிறது

தமிழரசு கழக மாநாடு

சென்னை, அக் 28—

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ தெ பொ. மீனாட்சிசுந்தரனார் அறிவிக்கிறார்.

தமிழரசு கழக மாநாடு சென்னை பெரியார் மேரீஸ் மண்டபத்தில் நவ 9உ ஞாயிறு காலையில் தொடங்கும் அச்சமயம் கழக தலைவர் ஸ்ரீ ம பொ சிவஞானகிராமணியார் மாநாட்டின் தலைமை தாங்குவார். ஸ்ரீமாதினி, மாநாட்டைத் திறந்து வைப்பார்.

திருவிதாங்கூர் சமிழகம் சித்தூர் ஜில்லா பிரஞ்சிந்தியத் தமிழகம். புதுக்கோட்டை சமஸ்தானம் மற்ற தமிழ் ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் வருவர். தீர்மானங்கள் அனுப்ப விரும்புவோர், 5-11-47-க்குள் தலைமை காரியாலயத்துக்கு (1-29, இராசப்ப கிராமணி தெரு, சென்னை-5) அனுப்பிவைக்கவும். தமிழ் நாட்டின் எல்லைப் பிரச்னையைப் பற்றி இந்த முக்கியமான மாநாட்டிற்கு நல்கொடை அளிக்க விரும்புவோர் உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

வ. உ. சி. ஞாபகார்த்த நிதி

அடுத்த வருஷம் காலேஜ் நிறுவப்படும்

தூத்துக்குடி, அக். 25—

சிதம்பரம் பிள்ளை காலேஜ் அடுத்த வருஷம் ஆரம்பிக்கப்படுமென்றும், இதுவரை ரூ 56202-1-4 வசூலாகியிருக்கிறதென்றும், மொத்தம் குறிப்பிட்டுள்ள தொகை வசூலானவுடன் காலேஜ் நிறுவுவதாகவுமென்றும் காரியதரிசிகள் தெரிவித்திருக்கிறார்கள். காலேஜ் ஆரம்பிப்பதற்கு சர்வகலாசாலை கமிஷன் ரூ 300 சர்வகலாசாலை மெமோராண்டல் தயாரிக்க ரூ, 116 செலவு செய்கிறார்களையும் குறிப்பிட விரும்புகிறோம். அடுத்த வருஷவ. உ. சி. கல்லூரி எழுப்ப தேசபக்தர்கள் உதவிபுரிவார்களாக

கலியுக பிரகலாதன்: 500 தடவை குத்தியும் சாகவில்லை

லூரிச், அக். 28—

மிரின் டாஜோ என்னும் டச்சு சிறுவ இதுவரை 500 தாம் கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களினால் குத்தப்படடும் கொதிக்கும் தண்ணீரில் அமுக்கப்பட்டும் மூக்கையில் துப்பாக்கியால் சுடப்பட்டும், விஷம் கொடுக்கப்பட்டும இன்னும் உயிரோடு இருக்கின்றான்.

தன்னுடைய சாமர்த்தியத்தையும் சக்தியையும் காட்ட டாஜோ இங்கரில் ஒரு காட்சி கொடுக்கபோது நடுக்கத்தி ஒன்றை தன் மார்புக்குள் குத்தச் சொல்லி ஈட்டியின் வழியாக முதுகின வெளியில் கொண்டு வந்தபோதுகூட சாகவில்லை உடம்பில் உள்ள காயத்தைத் தவர ஒரு துளி ரத்தம் கூட சிந்தவில்லை யென்று "எக்ஸரே" பரீக்ஷை செயததில் தெரியவந்தது. ஆனால் தந்திரம் ஒன்றும் இல்லை என்பதுவும் கூடடத்திறகு நன்றாக விளங்கியது.

உதவி செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும்

நூல் 'டிப்போ' அவசியமான தேவை

கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாக்க தமிழ்க் காங்கிரஸ் பாடுபடும்

நெசவாளர் மகாநாட்டில் திரு க. கனகரத்தினம் பிரசங்கம்

"டொமினியன் அந்தஸ்தோ அல்லது சுயராச்சியமோ கிடைத்து விட்டால் மாத்திரம் நமக்குப் போதாது. நம் நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழக்கூடிய வழி வகைகளை நாம் தேடவேண்டும். யுத்தகாலத்தில் இலங்கையில் தீவிரமாக வளர்ச்சியடைந்த தொழில்களில் கைத்தறி நெசவுத் தொழில் முக்கியமானது. அதை அழிந்துபோகவிடாமல் காப்பாற்றவதற்கு நம்பால் இயன்றவரை நாம் பாடுபடவேண்டும்; நானும் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இத்தொழிலின் வளர்ச்சிக்காக இயன்ற வரை போராடுவோம்."

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதிப் பிரதிநிதியான திரு. க. கனகரத்தினம அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வட இலங்கை நெசவாளர் மகாநாட்டில் கூறினார். மேலும் அவர் பேசுகையில் பருத்தியை நம் நாட்டிலேயே உற்பத்தியாக்க முடியுமென்றும், அப்படிச் செய்வதன் மூலம் நெசவுத் தொழிலுக்கு வேண்டிய நூலை குறைந்த விலையில் இலங்கையிலேயே பெற்றுக்கொள்ள முடியுமென்றும் கூறினார். வட இலங்கை நெசவாளர் சங்கம் இத்தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபடுவது அவர்களின் சுய நன்மைக்காக மாத்திரமன்றி, ஒரு சிறந்த தேச சேவையாகவும் இருக்குமென்பதையும் எடுத்துக் காட்டினார்.

அடுத்ததாக திரு ச. ஹண்டி பேரின்பநாயகம் பி. ஏ. அவர்கள் "அரசாங்கம் கைத்தொழிற் பகுதிக்காக வருடந்தோறும எவ்வளவு பணம் செலவு கோடி ரூபாய் பெறுமதியான துணி உற்பத்தி செய்யப்பட்டது இலங்கையில் வாழும் மக்களுக்குச் சராசரி வருஷத்துக்கு இரண்டு யார் வீதம் பங்கீடு செய்யக்கூடிய அளவு துணி உற்பத்தியாக்கப்பட்டது. யுத்தம் முடிந்ததும் அந்நிய துணிகளின் போட்டி ஆரம்பமாகிவிட்டது. அத்துடன் யுத்தத்திற்கு முன்னர் ரூத்தல் 50சதம் விற்ற நூல், யுத்தகாலத்தில் 1.80 சதமாகியது துணிகளின் விலை குறைந்த இக்காலத்தில் அரசாங்கமே அதே நூலை 3.90 சதமாக விற்கிறது யுத்தத்தின்பின் துணிகளின் விலை இறங்க, நூலின் விலையோ பலமடங்காகப் பெருகிவிட்டது. இந்த நிலையில் இத்தொழில் உயிர் வாழ்வதெப்படி? அரசாங்கமும் இத்தொழிலைப் பாதுகாப்பதற்கு ஏற்ற முயற்சிகள் எடுப்பதாகத் தெரியவில்லை

அரசாங்கம் வெளிநாட்டுத் துணிகளின் இறக்குமதிக்குத் தகுந்த கட்டுப்பாடு (அதாவது கோட்டாமுறை) ஏற்படுத்த வேண்டும். அல்லது தொழிலின் விருத்திக்கேற்ற புதிய வழிகளைக் கையாண்டு பாதுகாப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறிது காலத்திற்குள்ளேயே இத்தொழில் அழிந்துபோக, பெருந்தொகையான தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுவார்கள். இத்தொழிலின் வளர்ச்சிக்கு அரசாங்கம் இடமுண்டாக்கி விடுமாயின், தற்போது வேலையில்லாமல் திண்டாடும் பதினாயிரக்கணக்கான மக்கள் இத்தொழிலின் மூலம் வேலை பெறுவார்களென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை

பின்வரும் பிரேரணைகள் தீர்மானிக்கப்பட்டன

1 இலங்கையில் கைத்தறி நெசவுத் தொழிலை விருத்திசெய்வதற்காக வெளிநாட்டுத் துணிகளின் இறக்குமதிக்குத் தகுந்த கட்டுப்பாட்டு முறையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

2 அரசாங்கம் இலங்கையில் நூல் நூற்கும் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்து கைத்தறி நெசவுக்காரருக்கு குறைந்தவிலையில் நூல் கொடுக்க வேண்டும்

3. ஆஸ்பத்திரிகள், சிறைச்சாலைகள் முதலிய அரசாங்கத் தேவைக்குரிய துணிகள் யாவற்றையும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்து அரசாங்கம் பெற வேண்டும்.

4. வட இலங்கையில் அரசாங்க நூல் "டிப்போ" ஒன்று திறக்கப்பட வேண்டும்.

5 வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் நூலுக்கு அரசாங்கம் தீர்வையும் லாபமும் வையாது நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

செயற்கை மழை

அமெரிக்க விமானங்கள் பொழிய வைக்கும்

வாஷிங்டன், அக். 29

அமெரிக்காவிலுள்ள நியு இங்கிலாந்து மாகாணத்தில் மழையில்லாது கொடிய உஷ்ணத்தால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக காடுகள் தீப்பற்றி எரிந்தால் ஊர்களுக்கும் ஜனங்களுக்கும், பொருட்களுக்கும் மிகுந்த சேதமேற்பட்டன. இதுவரை 3 கோடி டாலர் நஷ்டமேற்பட்டிருப்பதுடன் 15 பேர்கள் மாண்டனர்.

அங்கு செயற்கை மழையைப் பொழிய வைத்து உஷ்ணத்தைத் தணிக்க அமெரிக்க ராணுவ விமானங்கள் முயற்சிகின்றன இன்று அவைகள் ஆகாயத்தில் மேகங்களுக்கு மேலாகப் பறந்து உலர்ந்த பனிப் பொடிகளை மேகங்கள் மீது தூவி மழை பொழியுமபடி செய்யும்

[ராய்ட்டர்]

செய்கிறது? ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகவே இந்த இலாக்கா உண்டாக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் நெசவாளர்கள் இந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு ஏதாவது தொழிலைத் தேடுவது தான் புத்தியாகும். ஏனெனில் அரசாங்கத்தின் உதவியில்லாமல் ஒரு போதும் இந்தத் தொழிலை நடாத்த முடியாது. அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தால் இத்தொழில் மிகச் சொற்பகாலங்கூட உயிர் வாழ முடியாது. வட இலங்கைக்கு மாத்திரம் அரசாங்கம் பிரத்தியேகமான உதவிகளைச் செய்ய மாட்டாது. ஆதலால் வட இலங்கை நெசவாளர் சங்கம், அகில இலங்கை நெசவாளர் சங்கத்தோடு சேர்ந்து தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும்." என்று கூறினார்.

சங்கத் தலைவர் திரு. க. கா. மதியாபரணம் அவர்கள் பேசியதாவது:- யுத்தத்திற்குமுன்னர் இலங்கையில் சிற்சில இடங்களில் மாத்திரம் நெசவு தொழில் நடைபெற்ற வந்தது யுத்தம் வந்ததும் நாட்டில் துணிப் பஞ்சம் ஏற்பட துணிகளின் விலை உயர்ந்தது. அரசாங்கமும் இத்தொழிலில் சிறிது கவனம் செலுத்தியது. மின்னல் வேகத்தில தொழில் வளர்ச்சி படைந்தது. இலங்கையில் சுமார் இருபதினாயிரம் பேர்கள் இத்தொழிலில் ஈடுபட்டார்கள் சென்ற ஆண்டில் சுமார் ஆறு

சென்னை புத்தகாலய மசோதா

மாகாணமெங்கும் நூல் நிலையங்கள் நிறுவயோசனை

சென்னை, அக். 28

நேற்று மாலை நடந்த மந்திரிசபை கூட்டத்தில, அடுத்த சட்டசபை கூட்டத்தில் சென்னை புதகாலயச் சட்டமென்றொரு மசோதா கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டது. அதன்படி இம் மாகாணதிலிருக்கும் புத்தகாலயங்கள யாவும் ஒரு முகப்படுத்தி, கல்வி இலாகா நிர்வாகத்திற்கு கொண்டுவருவதே அதன் நோக்கமாகும்.

பொதுஜன அபிப்பிராயத்துக்கு இம மசோதா சீக்கிரமே வெளியிடப்படும். அதன் விதிகளின்படி புத்தகாலய தீர்வையொன்று இதற்கு நிதி திரட்டப்படும் நிரந்தரச் செலவு ரூ. லட்சமும், வருஷாந்திரச் செலவு ரூ 80,200ம் இதற்குப் பிடிக்குமென்று தெரிகிறது.

சென்னையில் மத்திய நூல் நிலையம்

சென்னையில் மத்திய நூல் நிலையமென்று நிறுவப்படும் புத்தகாலய டைரக்டர் எனபவர் இம்மாகாண வேலை முழுமையும் மேல கவனிப்பார் புத்தகாலயமுறை பிரதேச புத்தகாலய கமிடி அமைப்பு முதலியன பற்றி ஆலோசனை கூற ஒரு கமிட்டியும் போடப்படும் சென்னையில் கார்ப்பொரேஷன், பிற இடங்களில் நகரசபைகள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து சபைகள் இவைபிரதேச புத்தகாலய நிர்வாக சபைகளாயிருக்கும். அந்தந்த இடத்துக்கு ஏற்றவகையில் ஸ்தலத்தானரைக் கொண்ட ஆலோசனை சபைகளை அவர்கள் போடுவர். கிராமங்களில் புத்தகாலயங்கள் நிறுவ, மசோதாவில் தனி ஷரத்துகளிருக்கும்.

பாங் ஆப் ஹிந்துஸ்தான்

3 வாரத்துக்கு பட்டுவாடா இல்லை

சென்னை, அக். 27

ஜார்ஜ்டவுனிலுள்ள "பாங்க் ஆப் ஹிந்துஸ்தான்" இன்று பணம் பட்டுவாடா செய்வதை நிறுத்திவிட்டது. பாங்க கதவு மூடப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக பாங்கி கட்டிடத்தில் தெளிவாக ஒரு நோட்டீஸ போடப்பட்டிருக்கிறது

ஹைகோர்ட் அனுமதி

வாடிக்கை காரர்களுக்குப் பணம் கொடுப்பதை தள்ளிப் போட அனுமதி கோரி இன்று மாலை சென்னை ஹைகோர்ட்டில் ஹிந்துஸ்தான் பாங்கியின் சார்பாக ஸ்ரீ வி. வி. கோபாலரத்னம் நீதிபதி கிளார்க் முன்பாக ஒரு மனுக் கொடுத்தார்.

நீதிபதி இந்த மனுவை ஏற்றுக்கொண்டு "பணம் கொடுப்பதை ஒத்திவைப்பது மூன்று வாரங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது இதன்படி ஜாயிண்ட் ஸடாக் கம்பெனி ரிஜிஸ்டிராருக்கும் நோட்டீஸ கொடுக்கப்படுகிறது. அவர் இந்த மூன்று வாரங்களுக்குள் பாங்கியின் செல்வ நிலை சம்பந்தமாக நீதிஸ்தலத்துக்கு அறிவிக்க வேண்டும் இந்த மனுவின் பேரில் விசாரணை நவம்பர் 8-ம் தேதி நடைபெறும்" என்றார்

தலைவர்களின் காலை வாரி விடவேண்டாம்

இமயத்தைப்போல் நாட்டின் கௌரவம் உயரவேண்டும்

திரு. ராஜகோபாலாச்சாரியார் பேச்சு

கல்கத்தா, அக். 28

மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் டார்ஜிலிங்கிலிருந்து கல்கத்தாவந்து சேர்ந்தார்.

சென்ற வெள்ளிக்கிழமையன்று டார்ஜிலிங்கில் அவருக்கு அளிக்கபபட்ட உபசாரத்துக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பேசியதாவது:-

"இந்தியா இப்பொழுது சுதந்திரமடைந்துவிட்டது. நம் தலைவர்கள் செங்குத்தான மலை மீது ஏறிச்சென்று, உலகத்தில் நம் நாடு நடு நாயகமாக இக்கும் கௌரவத்தை சம்பாதிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மிகப் பலுவான பொறுப்பு-மூட்டைகளைச் சுமந்து செல்கிறார்கள். மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் தலைவர்களை நம மக்கள் பின்னிருந்து காலை வாரிவிடக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் போடும் ஒவ்வொரு சண்டையும் நம் தலைவர்களைக் காலை வாரி விடுவதற்கே சமமாகும். நம் தலைவர்கள் உலகத்தின் கௌரவமெனும் உச்சி சிகரத்தைப் பிடிக்க வண்டுமானால், மக்கள் தங்களுக்குள் அன்னியோன்னிய நட்புடனும் சமாதானத்துடனும் இருக்கவேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும்

இந்தியா சுதந்திரமடைந்ததும், இந்தியாவும் பாகிஸ்தானும் ஸ்விட்ஸ்லாந்து பிரமபுதாராஜ்ய நதிகளைப்போல் தோன்றின ஆனால் இவைகளுக்குள்ளே கங்கை போன்ற நல்லுணர்ச்சிவேண்டும். இந்த மூன்று நதிகளும் இமயமலையிலிருந்தே உற்பத்தியாகி வருகின்றன இந்தியாவும் பாகிஸ்தானும் நன்றாக வாழ வேண்டுமானால், இந்த இரு நாடுகளுக்கிடையே சண்டை சச்சரவு இருக்கலாகாது.

தலைவர்கள் சண்டை போடும்படிச் சொன்னாலொழிய, ஜனங்கள் வகுப்புச் சண்டையில் இறங்கலாகாது அப்படிப்பட்ட உத்தரவை நம் தலைவர்கள் கொடுக்காமலிருக்கும்படி நாம் பிரார்த்திப்போம்.

இமயமலை டார்ஜிலிங் குன்று போல், மக்கள் தங்களது நாட்டின் கௌரவத்தை உயர்த்திப் பிடிக்க முன் வரவேண்டும்.

'காந்திஜியும் நேருவுமே இந்தியாவைக் காப்பாற்ற முடியும்'

பம்பாய், அக் 28

"இந்தியாவை மகாத்மா காந்தி, பண்டித நேரு ஆகிய இருவர்களேதான் ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும். அவர்களை இந்தியா பின்பற்ற வேண்டும்" என்று, ஈரானில் இந்தியாவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ. சையத் அலி ஜஹீர், பம்பாய் காங்கிரஸ் கமிடி தனக்கு அளித்த வரவேற்பு உபசாரத்தின் போது பேசுகையில கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"காந்திஜி கூறுவதுபோல் இந்தியா ஒரேதேசம் என்பதை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் நம்பவேண்டும். இந்தியா ஒரே தேசம் என்றுதான் நான் நம்பி வருகிறேன். ஜின்னாவும் அவர் சீடர்களும் கூறிவரும் இரு தேச கொள்கையை நான் என்றுமே நம்புவதில்லை.

"பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறி திலிருந்து இந்தியர்களால் தங்கள்நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை என்ற அபிப்பிராயத்தில் உலகம் இருந்து வருகிறது. நம் கீர்த்தி நாம் இப்பொழுது செய்வதைப் பொறுத்திருக்கிறது. இந்த பலாத்கார அட்டூழியத்தை நாம் செய்து கொண்டிருக்கக் கூடாது. வகுப்பு சௌஜன்யத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவின் கீர்த்தியையும் கலாச்சாரத்தையும காப்பாற்ற நாம் முயற்சிக்க வேண்டும்."

கிருஷ்ணராஜ சாகரத்திற்கு இருவர் பலி

'சிந்து அப்சர்வர்' ஆசிரியரின் மகனும் பேரனும்

பங்களூர், அக் 28—

ஷோலாம்பூர் இம்பீரியல் பாங்கி ஏஜண்டும், கராச்சி, சிந்து அப்சர்வர் ஆசிரியர் கே புன்னையாவின் மகனுமான எஸ். இ கோட்டம் ராஜ்கிருஷ்ணராஜ சாகர ஏரியில் நேற்று மூழ்கி மாண்டார். நீந்தப் போய் மூழ்கிபோன தம் மகனைக் காப்பாற்றப்போய் இருவரும் இறந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதவது:

சிங்கக் கொடிக்கு தமிழர்கள் எதிர்ப்பு

வகுப்புக் கலகம் ஏற்படும்!

ஒரு சிங்களப் பத்திரிகை பயமுறுத்துகிறது

சென்ற சனிக்கிழமை வெளிவந்த "திவயின" என்னும் சிங்களப்பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்

பாராளுமன்ற ஆரம்பத்தின் போது, அரசாங்கக் கட்டிடங்களில் ஏற்றுவதற்கென 50 ஆயிரம் சிங்கக் கொடிகள் வரவழைக்கப் பட்டதெனினும், திரு பொன்னம்பலமும் அவரது சகாக்களும் காட்டிய பிரமிக்கத்தக்க எதிர்ப்பினால் அவைகளை உபயோகிப்பதை தடை செய்யப்பட்டிருக்கிறது இவர்களின் எதிர்ப்பினால் சிங்களவர்களுக்குப் பொறுக்கமுடியாத கோபத்தை உண்டாக்கியிருக்கிறது. தேசிய சிறப்பாகமாத்திரமல்ல, புராதனப் பெருமை வாய்ந்த வாளேந்திய சிங்கக் கொடியை நமக்கு கிடைக்கும் சுதந்திரத்தோடு தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்வதற்கு, தேசாபிமானமுள்ள சகல சாஹியத்தவர்களும் ஒப்புக்கொள்வதற்கு ஆட்சேபனை ஏன்?

திரு பொன்னம்பலம் வர்க்கத்தினரிடையேயும், அவர்களின் வகுப்பு வாதத்தில் மயங்காத திரு சிற்றம்பலம் போன்றவர்கள் வடக்கே (யாழ்ப்பாணத்தவராய்) யுள்ளவர்களின் ஆட்சேபனைக்கு சமாதானம் கூறியிருக்கிறார் எனினும் பொன்னம்பலம் கட்சியினரால் செய்யப்படும் கிளர்ச்சிகள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்லவேண்டியிருக்கிறது. பிறந்த நாள் தொடங்கி-அரசியல் பேடையில் ஏறிய நாட் தொடங்கி சிங்களவர்களுடன் ஜென்மவைராக்கியம் கொண்டிருக்கும் திரு பொன்னம்பலமும், எந்தமதயினக்கும் கூட நிர்ப்பயமாக நிற்கப்பழகியிருக்கும் அவரின் தமிழ்க்காங்கிரஸ் என்னும் நாய்கள் கூட்டமும், சிங்கக் கொடி இலங்கையின் தேசியக் கொடியாக ஸ்தாபிப்பதற்கு ஏன் இவ்வளவு பிரமிப்பான எதிர்ப்பைக் காட்டுகிறார்கள்? இலங்கையின் பெரும்பான்மையினரான சிங்களவர்களினால் தம் வர்க்கத்தினருக்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிலைமை சம்பந்தமான பயங்கரக் கனவு கண்டு பயந்து விட்டதினால்தான். ஆனால் அக்கனவு வெறுமனே மாயையே என்றும் அவர் நினைப்பதுபோன்று அவ்வளவு அக்கிரமமும் பயங்கரமும் ஏற்பட்டுவிடாதென்றும் திரு பொன்னம்பலம் எண்ணிக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் சிங்களவர் மீது காட்டும் வைராக்கியமானது கண்மூடித்தனமான முட்டாள்தனமேயாகும். சிங்களவர்களின் கிறிஸ் குத்திலிருந்து தப்புவதற்கு தமிழர் காங்கிரஸிற்கு சம்மதம் கொடுத்த புகழியற்ற யாழ்பாணத்தவர்கள் நிலையைப் நன்குணரவேண்டும். சந்திக்கிற எல்லா இடங்களிலும் சிங்களவர்கள் மீது தமிழர்கள் காட்டும் வைராக்கியத்திற்கு, எங்கேயாவது எவருக்காவது சிங்களவர்கள் பதில் நடவடிக்கை எடுத்திருப்பார்களானால், அதன் பிரதி பலன் தமிழர்களின் துரதிர்ஷ்டத்திற்கு அடிகோலி விடும். இதனால் சிங்களவர்களுக்கல்ல நஷ்டம் என்பதை தமிழர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதை வகுப்புப் பூசலைக் கிளப்பி விடுவதற்காகவல்ல, சரியான நிலைமையை உணரவேண்டுமென்பதற்கே எடுத்துக் காட்டுகிறோம்.

சிங்களவர்கள்-இன்றைய சிங்களவர்கள்-தன் சாசியின் கௌரவத்தை மறந்துபோனவர்களல்ல எனினும், திரு பொன்னம்பலம் போன்ற வகுப்புவாதிகளல்ல என்பதை தமிழர்கள் உணரவேண்டும் சிங்களவர்கள் விரும்புவது தமிழர்களுடனோ அல்லது வேறு ஜாதியினருடனோ எக்காரணத்தைக் கொண்டும் ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டும், சச்சரவு செய்துகொண்டும், நாசமாய்ப் போவதற்கல்ல தேசத்தில் சீர்கேடையுண்டாக்குவதற்கல்ல சமாதான மக்களின் வாழ்க்கையில் மண்ணள்ளிப் போடுவதற்கல்ல. முஸ்லிம்களும், பறங்கியர்களும் சிங்களவர்களின் சமாதானப் பிரியத்தை நன்கறிவார்கள் சிங்களவர்களின் அருமை பெருமைகளை அறியாதவர்கள், திரு பொன்னம்பலம் அவரின் போலிக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் தமிழ்க் காங்கிரஸ்கட்சியினருமேயாவர்

திரு பொன்னம்பலத்திற்கு நடவடிக்கையாக, சிங்களவர்கள் வகுப்புவாத வெறி கொண்டு உணர்ச்சிபெற்று எழுந்தாலிடுவார்களானால், இந்நாவில் நடக்கும் ஹிந்து-முஸ்லிம் கலவரத்திற்கு மிஞ்சிய அக்கிரமங்கள் ஏற்பட்டுவிடும் என்பது நிச்சயம். இதனால் கஷ்டப்படுபவர்கள் சிங்களவர்களல்ல, தமிழர்களுக்கே வரக்கூடிய எதனையோவிதமாக துர்ப்பாக்கிய நிலைமைகள் ஏற்பட்டுவிடும். அப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டால் அதைத் தடுப்பது நாளை காலை உதயமாகும் சூரியனை தடை செய்வதைப்போன்றதேயாகும்

சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக ஏற்றுவதற்கு பொன்னம்பலம் கட்சி பிரமிக்கத்தக்க வகையில் எதிர்ப்பதற்குக் காரணம், அவர்கள் சிங்களவர் மீது காட்டும் ஜன்ம வைராக்கியமேயாகும். வேறொரு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை சுமார் 2000 வருடங்கள் சென்ற புராதனமான சிங்கக் கொடியானது, சிங்களவர்களின் கொடியாகவேதான் அவர்கள் கருதுகிறார்கள். இதற்கு சிங்களவர் மீது குற்றம் சாட்ட முடியாது. ஏனென்றால் அப்படி சிங்கக் கொடியை, சிங்களவர்களின் கொடியாகக் கருதும் உரிமையை உண்டாக்கியவர்கள் தமிழர்களேயாவர்.

சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக ஒப்புக்கொள்ளுவதற்கு பொன்னம்பலம் கட்சியினரையும் அவர்களின் ஆதரவாளர்களையும் விட எத்தககிலிருந்து பார்த்தாலும் மற்ற சகல சாஹியத்தினரும் சிங்கக் கொடியை தேசியக்கொடியாகஏற்படுகத்துவதன் அவசியத்தை நன்குணர்ந்திருக்கிறார்கள். அப்படியே வரவேற்கிறார்கள். உலகத்திலேயே மிகவும் பழமை வாய்ந்ததான சிங்கக் கொடியை இதுதேச மக்கள் தேசியக் கொடியாக கௌரவிப்பதைத் தடுத்து அதை மாற்றி அதற்குப் பதிலாக வேறு கந்தைத் துணியை நிலைநாட்டுவதற்கு முயன்றால் திரு பொன்னம்பலம் இலங்கையின் ஜின்னாவாகி விடுவது நிச்சயம்.

அடுத்தபடியாக திரு. பொன்னம்பலம் தனக்கேற்படும் பராசயத்தையும், பராஜயத்தையும் மறைக்க தன் விருப்பம் போல் நடவடிக்கையெடுக்க வேண்டுமானால் இலங்கையிலுள்ள சிங்களவர்களுக்கல்ல நஷ்டம் என்பதை தமிழர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதை வகுப்புப் பூசலைக் கிளப்பி விடுவதற்காகவல்ல, சரியான நிலைமையை உணரவேண்டுமென்பதற்கே எடுத்துக் காட்டுகிறோம்.

சிங்களவர்கள்-இன்றைய சிங்களவர்கள்-தன் சாசியின் கௌரவத்தை மறந்துபோனவர்களல்ல எனினும், திரு பொன்னம்பலம் போன்ற வகுப்புவாதிகளல்ல என்பதை தமி

ஆசிரியருக்குக் கடிதங்கள்

தமிழ மந்திரிகள் தமிழருக்குச் சாதிக்கப் போவதெனன்?

தமிழன் தலைநிமிர்ந்து விட்டான். தன் பண்டையோரின் ஒற்றுமை, அறிவு, ஆற்றல் இவைகளைத் திரும்பவும் பெற்றுவிட்டான். தம்மை வஞ்சிப்போரை உதறித் தள்ளிவிடுவான், என்ற பெருமையைச் சேர்ந்த பொதுத் தேர்தலில், இவ்வலங்கையிலும் நிலைநாட்டிவிட்டான. ஆனால் தமிழரைக் காட்டிக் கொடுப்பதில தலை சிறந்த, மகாதேவா கூட்டம் வேரோடறுக்கப்பட்டும், இன்னும் தமிழனைப் பிடித்ததீடை ஈடேறுவதாயில்லை. தமிழர்கள் ஒற்றுமையில் தலைசிறந்தவர்கள், என்பதை அண்மையில் சென்னை மகாணத்தார் நிலைநாட்டி நற்பெயரும், புகழும் கொண்டிக்கொண்டார்கள். எந்த ஒற்றுமைக் கொடி பறக்கக் கூடாதென்ற காரணத்தால்தான் இங்கு இவ்வகை நேர்ந்ததோ வென்ற பலத்த சந்தேகம்.

சில தமிழ்ப் பிரதிநிதிகள் சுயநலத்தை மன அடிப்படையில் கொண்டிருந்தார்கள் அதனால்தான் சுயேச்சை என்ற போர்வையால் தங்களை மூடிக் கொண்டார்கள் இக்கபடவேடங்களை, அப்பாவித்தமிழர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை தங்கள் காரியம் கைகூடிய பின்தான், சுய ரூபத்தைத் தொடங்கினார்கள். அதிலும் மன்னார் பிரதிநிதி, தமிழரின் உண்மைக் கட்சியாகிய, காங்கிரஸின் உறுதியான பக்கபலத்துடன் போராடியவர் தமிழ்த்தலைவன் ஜீ ஜீயின் உறுதியான பரசாரத்தால் தான், தன்னவர் வெற்றி கொண்டவர் பேரவையில் "ஐக்கிய தேசியக் கட்சி"யின் ஊழல்களை, வாய்சொண்டமடுப்ப, ஊறறியக் கூறியவர். ஆனால் இனறு, அதே ஊழல் கட்சியில் மந்திரி பதவி யேற்றதும் கூறியவற்றையும், மற்றவர்கள் செய்த உதவியையும், சில தினசரிகள் மூலம் மறைக்க முயலுகின்றார்

அடுத்தவர் மணிதப் பேரறிஞர். தமிழரில் பெருந்தகை என்றாலும் அரசியலில் என்றுமொரு கூட்டத்தாரின் கைக்குழந்தையாகிவிட்டார். இவர் தயமை ஒன்றல்ல, மூன்று முறை தேடிவந்து விட்டார் ஏதோ நலன் அறிவாளி, மற்றவரிலும் தகுதிகொண்டவர், என்ற கோதாவில் வவனியா மக்கள், இம்முறை கைகொடுத்தார்கள் ஆனால் பொதுமக்கள் அவர் மேலகொண்ட பெருநேர்க்கத்தை இன்று இழந்துவிட்டார்: தான் பெற்ற வழியில் மற்ற சுயேச்சைப் பிரதிநிதிகளையுமிடுத்துச்சென்றார் ஆனால் இரண்டொரு பதவி வேட்டைக்காரர்தான், அவர் வலையில் சிக்குண்டனர், மற்றவர்கள் தப்பிடுகுழியில் விழாது தப்பித்துக் கொண்டனர்.

மற்றவர் "கற்குடா"ப் பிரதிநிதி இவர் ஏதோ தன்தொகுதிக்கு வெட்டிச் சாய்த்துவிட்டாரா ; அது இலங்கை வாழ் மிழரத் திருப்திப்படுத்த ஆடுபாம் அதுவும் ஒரு துறையிலேதான் கடிவாளமிட்ட குதிரைபோல், ஒரே போக்கில் போய்க் கொண்டிருந்தால், அரசியல் மேதையாகவிட முடியாது. தினசரி ஊதியதிற்கு திண்டாடும் பாடடாளி மக்களின் நலனையும் பாதுகாக்க முன் வரவேண்டும். இவர் சென்ற அரசாங்கசபையில் மட்டக்களப்பு வடபகுதிக்குப், திரிகோணமலை முழுப் பகுதிக்கும் பிரதிநிதியாயிருந்தார் அந்நாளில் திரிகோணமலைக் உருப்படியான ஒருவித நன்மையும் செய்தலர் ஏதோ தமக்குத் தேர்தல் காலத்தில், உதவிய ஒரு சிலருக்கு உயர் பதவியும் உத்தியோகமுடைய, உறுதுணையாயிருந்திருக்கின்றார். இதைவிடத் திரிகோணமலைக்கு என்ன சமைமாறு செய்தார். திரிகோணமலை இவர் காலத்தில் தீயால் வெந்தது ஒருபுறம்; நீரால் அழிந்தது ஒருபுறம். எப்முறையாவது அதற்கேற்ற ஒருசுகு முறைகளை கையாண்டாரா. வாகுதேடியகாலத்து உம் வாய் ஏதேதோ வெல்லாம் கூறியது. அவை யெல்லாம் "ஏடடுச் சுரைக்காய் போலாகி விட்டது."

கண்டியில் பர்மிய அதிகாரி

கண்டி, அக். 27

பர்மா சர்க்கார் விவசாய உதவி டைரக்டர் உ தெட சு இவகு நெல் சாகுபடிக்கு எவ்வித இயந்தரசாதனங்கள் உபயோகிக்கப்படுகின்றனவென்பதை அறியும பொருடு வந்திருக்கிறார். இலங்கையின் புதிய விவசாய டைரக்டர் டாக்டாடி. ரைனட் அவரைச் சந்தித்தார். இருவரும் நெல் சாகுபடியாகும் இடத்திற்குச் சென்று பார்வையிடுவார்கள்.

சீன-பர்மா உறவு

ரங்கூன், அக் 27

பர்மாவும் சீனவும் பரஸபரம் ஸதானிகர்களை நியமிததுக் கொளளுமெனறு பர்மா அந்நிய நாட்டிலாக்காதார் அறிவித்தனர். [ரா:ய்ட்டா]

"நாம் யூன் என். பி. அங்கத்தினரல்ல" என்று மேலும் இரு மூமான்கள் கூறிவருவார்களானால் அவர்கள் உலகறிய நாம் யூ என் பி யின் கூலிக் குலாங்கள் என்று பிரகடனம் செய்வதாகவே அர்த்தமாகும்.

இங்ஙனம்,
வி. மாசிலாமணி.

சோனகவீதி,
வெள்ளவத்தை.
27-10-47

தலைகீழ்ப் பாடம்

அன்புள்ள ஐயா,

மன்னார் பிரதிநிதி திரு. ஸி. சிற்றம்பலமும், வவனியாப் பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கமும் யூ. என். பி மந்திரிசபையில் பதவி ஏற்றுக்கொண்ட பின்னரும் தாம் 'சுயேச்சையாளர்' கள் என்று கூறி வருகிறார்கள். இது தலைக் கீழ்ப் பாடமாய் இருக்கிறது. 'ஐக்கிய தேசிய'க் கட்சியின் கூட்டத்திற்குச் சமூகமளித்து 'சேனட் சபைக்கு யூ. என். பி அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு உபகமிட்டி நியமிக்குமாறு பிரேரித்த திரு. ஸி. சுந்தரலிங்கம் இன்னும் தான் 'சுயேச்சேளரே' என்று கூறுவதைப் படிக்கும் போது வேடிக்கையை உண்டுபண்ணுகிறது.

பார்லிமெண்டிலே ஒரு சுயேச்சைவாது எப்பவது தனது அரசியல் அனுதாபம் எப்படி இருந்தபோதிலும் எல்லா விவகாதிலும் தனது தனிப்பட்ட தீர்மானத்தையும். சுதந்திரச் செயலையும் புரியும் உரிமை கொண்டிருப்பானவன் ஆனால் பிரிட்டிஷ் மோஸ்தரில் உளள கபினட் அரசாங்க முறையோ 'கூட்டுப் பொறுப்பு' என்ற கொள்கையை அடிப்படையாய்க் கொண்டதாகும் இங்குள்ள சேனநாயகா மந்திரி சபை யூ. என். பி. கொள்கையை பூரணமாய் அமுல் நடத்தக் கடமைப்பட்டுள்ளது. இத்தகைய மந்திரி சபையின் அங்கத்தினர் என்ற முறையில் திரு. சிற்றம்பலத்திறகோ, திரு சுந்தரலிங்கத்திற்கோ அவர்களது தீர்மானங்களிலோ செயல்களிலோ எவ்வித சுதந்திரமும் கிடையாது. இப்படிப்பட்ட நிலையில்,

திருக்கேதீச்சரச் சைவ வித்தியாசாலைத் திறப்பு

மன்னார், அக் 27

மன்னார் பிரிவில் திருக்கேதீச்சரமாய புராணிக சிவ ஸ்தலத்திற் கண்மையிலுள்ள மாழிகைத் திடல என்னும் கிராமத்தில் சென்ற 24-10-47 வெள்ளிக்கிழமை விஜயதசமி நாளுக்கு மேற்படி யூர் சைவ இளைஞர் சபையினரால் சபைக் தலைவர் கௌரவ சி. நடராச ஐயர் அவர்களைக் கொண்டு மேற்படி பாடசாலை திறந்தாரம்பிக்கப்பட்டது ஆசிரியர் எஸ். நாகரத்தினமவர்களால் இருபத்தி நாலு பிளளைகட்கு வித்தியாரம்பஞ் செய்யப்பட்டது அக்கிராமங்கட குரிய பெற்றோரும் பிள்ளைகளும் சமூகமளித்தனர் பிரமாந்தை உணவுப் பொருளும் பத்திக தலைவர் கௌரவ எஸ். வெற்றிவேல் அவர்கள் தலைமையில் திரு. எஸ். பொன்னையா அவர்களின் தேவார பாராயணத்துடன் கூடடமாரம்பமாயது எஸ. செ லையா ஆசிரியர் அவர்களால் 'சமயமும் தொண்டும்' என்ற விஷயமும் பாடசாலை நிர்வாகம்' என்ற விஷயம ஆசிரியர் எஸ. நாகரத்தினமவர்களாலும 'மனிதனின் கடமைகள் என்ற விஷயம் எஸ சோமசுந்தரக்தாலும் பேசப்பட்டதுபின் காரியதரிசியவர்களின் குறிப்புரை கூறினர்

தேவை

யாழ்ப்பாணப் பாணிப் பனட்டும் ஓடியல் மாவும் போத்தலில் அடைத்து நிலைப்படுத்தம் இலாந்துக்கும் அனுப்பி வியாபாரம் செய்ய பங்காளிகள் தேவை விபரங்களுக்கு:- 21, காலி ரோட், கொள்ளுப்பிட்டி.

அரிய நூல் வெளியாகி விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்படிருக்கின்றன.

முற்பதிவுக் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85. பழைய சோனகத்தெரு,
கொழும்பு

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மதுரைக்கார கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி.
செரக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடி ரிங்லேபில்



அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றினும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும். நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திர முறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
பரேன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுதர் அன் கோ, வத்துகாமம்
A S. M. முகைதீன் அன் கோ, மாதளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஒளி பாதம்வரை மிலசார விளக்குகள்

நோட்டன் பிரிட்ஜில் கொண்டாட்டம்

கொழும்பு, அக் 28

சிவஒளிபாதமலையுச்சி வரை செலலும் பாதை நெடுகிலும் மின்சார வெளிச்சம் ஏற்படுத்தும் கொண்டாட்டத்தில் நோட்டன் பிரிட்ஜில் உள்ள தொழிலாளர் ஞாயிற்றுக்கிழமை கலந்து கொளவர். நோட்டனில் உள்ள குகைப் பாதைகளில் அபாயகரமென்று கருதப்படும் பகுதிகளில் பல விளக்குகளை வைக்கும் கொண்டாடடதில் திரு ஜே. எல். கொத்தலாவல கலந்து கொள்வார். இங்கு ஆகஸடு வெள்ளத்தின் போது உயிரிழந்த 29 தொழிலாளருக்கும் ஞாபகார்த்த சின்னம இங்கு வைக்கப்படும். இங்கு இத்திட்டப்படி நடக்கும் வேலைகளை விரைவில் செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுளளன.

பொருட்களைக் கையாடினரா?

ஐக்கிய சங்கக் கடை மானேஜர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், அக். 28

சோனகதெரு ஐக்கிய சங்கக கடைச் சொததான ரூ. 5000 பெறுமதியான ஜவுளியையும், பால் டின்களையும காசையும் கையாடிவிடடதாக என். எம். முகம்மது என்வர் மீது செய்யப்பட்ட குற்றச் சாட்டின் காரணமாக குறித்த நபர் மீது மாஜஸடிரேட கடடளை பிறப்பித்துளளார். பேற்படி நபர் குறித்த ஐக்கிய சங்கக் கடையின மானேஜராவர். (ந-நி)

கைத்தொழில் ஆசிரியர் கூடடம்

கொழும்பு, அக் 29

கைத்தொழில் இலாகாவுடன தொடர்புளள கைததொழில் பயிறசி ஆசிரியர்கள் பொதுக் கூடடம் லோரஸ கல்லூரியிலும், மதுரை பாடசாலையிலும சனிக் முயையும ஞாயிறுககழமையும நடைபெறற முதல் நாள் கூடடததில் சங்க நிரவாகிகள தெரியபபட்டனர் இரணடாவது நாளைய கூடடததில கைததொழில், தொழில ஆராய்ச்சி, மீன் பிடிபபகுதி மந்திரி தலைமை வகிததது நடததினர் சுமார் 100க்கு அதிகமான ஆசிரியாகள் இதில் கலந்து கொண்டனர்.

தொழில்கல்லூரிக் கூடடத்தில் கல்வி மந்திரி பேச்சு

கொழும்பு, அக் 29

கொழும்பு தொழிற் கல்லூரி மண்டபததில் கல்வி மந்திரி திரு. ஈ. ஏ. நுகவெல தலைமையில் நடந்த கூடடததில் "வர்ததகத தொழல்" என்னும் விஷயப பற்றி ஸர். ஜோன டார்பட பேசினர். இக்கூடடததில கல்வி மந்திரி பேசுகையில் இது வரை காலமும இலங்கையின உற்பத்தி இலங்கையர் கையில் இருககவில்லையென்றும், இலங்கையில் உற்பத்தி பொருள்கள் அந்நிய நாடடுக் கப்பல்களால் ஏறறிச் செல்லப்பட்டு இலங்கையர் கடடுப்பாடினறி அந்நியர் எண்ணப்படி விற்பனை செய்யபபடடதென்றும் சுதந்திரததுக்கு ஏதாவது கருத்திருப்பின் இனிமேல் இவ்விதம் நடவாது பார்க்க வேண்டுமென்றும் கூறினர்.

இலவசத்திட்டத்தின்கீழ் ஆசிரியர்கள் சம்பளம்

கொழும்பு, அக் 29

இலவசக் கலவித்திட்டத்தின கீழ் ஒவ்வொரு மாகமும முடியமுடிய ஆசிரியர்களி பசம்பளததைக் கொடுக்க வேண்டுமென்றும அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் கல்வி மந்திரக்குத் தெரிவித்துளளது. இந்த பபணை ஆசிரியர்களி சம்பளங்களை காலதாமதமின்றி செலுததுவதற்கு தைரகடர் நடவடிக்கை எடுததுள்ளார் என்று அறிய படுகிறது. ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளங்களும் நவமபர் முடிய செலுததபபடுமென்று தெரிகிறது.

நகைகளை வாடியதாக வழக்கு

மூவருக்கு சிறைத் தண்டனை

திரிகோணமலை, அக் 28

பெரிய நின்னியா வரகிகளாகிய காசிம் மம்மது, நூர் அப்துல் மனாப், வி. ராமசாமி ஆகியவர்கள் சென்ற மாதம் உம்பாறு என்னுமிடத்தில் நகைகளையும், உடுப்புகளையும் களவாடியதாகப் போலிஸாரால் குற்றஞ்சாட்டிக் தொடரப்பட்ட வழக்கில் இன்று மாஜிஸ்டிரேட் திரு நோலன் டி சொய்சாவால் தீர்ப்பளிக்கப்பட்டது. இவர்களில் முதலாம் எதிரிக்கு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனையும் மூன்று வருஷம் போலிஸ் மேற் பார்வையும், இரண்டாம் எதிரிக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும், மூன்றும் எதிரிக்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையும் ஒரு வருடப் போலிஸ் மேற் பார்வையும் விதிக்கப்பட்டது. முதலாம் எதிரியும் மூன்றும் எதிரியும் மூன்றாம் கோர்ட்டில் குற்றப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. (ந-நி)

5 வருட சிறையும் 10 பிரம்படியும்

வழியில் சென்ற பெண் மீது பலாத்காரம் புரிந்தவர்

கொழும்பு, அக் 29

ஆஸபத்திரியில் ஒரு நர்ஸுக்கு உணவு எடுக்கச் சென்று விடு திரும்பி வந்து கொண்டிருந்த எம் ஏ மார்கரட் என்னும் இளம் பெண்ணை நோரிஸ கனல் ரோட்டில் வழிமறித்து பலாத்காரமாகத் தூக்கிச் சென்று கற்பழித்ததாகக் குற்றச் சாடடப்பட்ட மாட்டின் குலரத்சிங (வயது 30) என்பவருக்கு நீதிபதி திரு டயஸ 5 வருடச் சிறைத் தண்டனையும், 10 பிரம்படியும் கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார். இலங்கை ஸ்தாக்களில் பெண்கள் பயமின்றி செல்ல முடியாத செய்யும் இத்தகைய நபர்களுக்கு படிப்பினையாக இருக்க வேண்டுமென்றும நீதிபதி குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர் நிலைமையை ஆராயவேண்டும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கமிட்டி தெரிவு செய்யப்பட்டது:-

சர்வதேச தொழில் ஸ்தாபன பிரதிநிதிகள்:- ஸர் இவான்ஸ; இவாக்குப்பதில் திரு ராமோஸ் திரு ஜோஷி கலந்துகொள்ளலாம்.

முதலாளிகள் கோஷ்டிப் பிரதிநிதிகள்:- லலா ஸ்ரீ ராம் (இந்தியா) வு (சைனு) கான் (பாக்கிஸ்தான்), காவின் (பிரிட்டன்), வான் பதரியான் (ஹாலந்து), ஜான்ஸ்சன்ஸ (பிரான்ஸ்) இவர்களுக்குப் பதிலாக எஸ் டபிள்யு க்ரு (பர்மா), திரு பெர்னுண்டஸ் (இலங்கை) கலந்துகொள்ளலாம்.

தொழிலாளர் கோஷ்டிப் பிரதிநிதிகள்:- எஸ். எஸ மீராஜ்கர் (இந்தியா), தக்கின் லவின் (பர்மா), வியாங (சைனு), திரு டீ சில்வா (இலங்கை), வாங (லாவோஸ), ராபர்ட்ஸ (பிரிட்டன்) இவர்களுக்குப் பதிலாக கான் (பாக்கிஸ்தான்), டி. சிவ சர்பு (மலேயா), மாஸக் (அஸ்திரேலியா) கலந்துகொள்ளலாம்.

வியட்நாமுக்கு அழைப்பில்லை

இந்தியாவிலுள்ள வியட்நாம் பிரதிநிதி ஆசியா தொழில் மகாநாட்டுப் பிரதிநிதிகளிடம் கீழ்க்கண்ட மகஜரின் பிரதிகளை வழங்கினர்:-

3 லட்சம் தொழிலாளர் உட்பட 2 கோடி ஜனத் தொகையுடைய வியட்நாம் ஆசிய தொழிலாளர் மகாநாட்டுக்கு அழைக்கப்படாதது குறித்து வருந்துகிறோம் வியட்நாம் மக்கள் 80 வருட காலமாக பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துவருகிறார்கள் வியட்நாம் சுதேசாபிமானிகளுடன் பிரெஞ்சு ஏகாதிபத்திய சர்க்கார் கடந்தபோடியவுக்குலாகப் பலவேறு வகையிலும் பிரதிநிதிகளை அனுப்பியிருக்கிறார்கள் பிரெஞ்சு அதிகாரிகள் கொண்டுவரும் இந்தோ-சைனு சம்பந்தமான தீர்மானங்களை வியட்நாம் ஏற்றுக்கொள்ளாது,

தொழிற்கட்சி சர்க்கார் ஞான திருஷ்டி

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சுதந்திரம் வழங்கியது

ரங்கூன், அக் 28

பர்மா நிதி தூதுக் கோஷ்டிக் தலைவராக லண்டன் சென்று திரும்பிய உடின் டுட் "பர்மீஸ் ரிவ்யூ" என்ற பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:-

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சுதந்திரம் வழங்கியது சர்வதேசமாக பிரிட்டனிலுள்ள சிலர் பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கத்தைக் கண்டிப்பது மட்டாள் தனமாகும். யுத்தக்கிற்குப் பின் பிரிட்டனில் வேறு எவ்வித அரசாங்கம் ஏற்பட்டிருந்தாலும் தொழிற்கட்சி அரசாங்கம் ஞானதிருஷ்டியுடன் செய்து வரும் காரியங்களைப் போல திறம்படச்செய்ய முடியாது.

குடியேற்றக் கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் பிற்போக்கான முறையில் அனுஷ்டித்திருந்தால் அதனால் இந்தியாவிலும் பர்மாவிலும் ஏற்படும் நிலையை அதனால் சமாளிக்க முடியாது ஹாலந்துப் பிரான்சும் பிரிட்டனைப்போல ஞானதிருஷ்டியுடன் முற்போக்கான கொள்கையை அனுஷ்டிக்காததால் இந்தோனேஷியாவிலும் இந்தோ-சைனாவிலும் அவைகள் தொல்லைக்கள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன

பர்மா சுதந்திர மசோதா

லண்டன், அக் 28

பர்மா சுதந்திர மசோதா பார்லிமெண்டில் நவம்பர் மாத ஆரம்பத்தில் இரண்டாவது முறையாக வாசிக்கப்படும்.

மூவர் கமிஷன்

பட்டேவியா, அக் 28

பாதுகாப்பு சவுன்ஸில் டச்சு-இந்தோனேஷியா தகராறு சம்பந்தமாக நியமிக்க மூவர் கமிஷன் இந்தோனேஷிய குடியரசு சர்க்காருடன் கலந்தாலோசனை இன்று ஜோர்ஜகர்த்தாவுக்குப் பயணமாகிறது. (ராய்ட்டர்)

தொழிற் சங்கத்துக்கு மூன்று முட்டுக்கட்டைகள்

கொழும்பு, அக். 29

பொது சேவை அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற் சங்கங்கள் கூட்ட சர்க்கார் மூன்று பெரிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் என்றும் அவைகள் தான் முக்கியமானவைகளென்றும் பொது சேவை அரசாங்க ஊழியர் லீக் தலைவர் தெரிவிக்கின்றார் இந்த லீக்கின் அங்கத்தினருக்கு இவற்றை விளக்கி "பொது சேவை அரசாங்க ஊழியரும்-இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையின் எதிர்ப்பு" என்னும் தலையங்கத்துடன் கொண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் கொலை

மட்டக்களப்பு, அக் 28

நகரில் இருந்து சுமார் 15 மைல் தூரத்திலுள்ள கிலகொடி சேனைவட்டை என்னும் இடத்தில் கணபதிப் பிள்ளை தம்பிமுத்து என்பவரை எஸ வேலபொடி என்னும் வேலன் என்பவர் மண்வெட்டியினால் தலையில் அடித்ததால் அவர் படுகாய மடைந்து ஆஸபத்திரியில்மரணமடைந்தாரென்று கூறப்படுகிறது. எதிரியைக் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர் மேற்கொண்டு விசாரணை நடைபெறுகிறது.

இளைஞன் மீது ரயில் ஏறியது

கொழும்பு, அக் 29

திங்கள் கிழமை அதிகாலையில் ரம்புக்கணைக்குச் சென்ற ரயில் ஊழியர் தொடவத்தையில் சுமார் 20 வயதுடைய ஒரு இளைஞன் மீது ஏறியதால் அவர் மரணமடைந்தார் என்றும் அந்த இளைஞனை இனங்கண்டு பிடிக்கவில்லையென்றும் தப்படுகிறது இது சம்பந்தமாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் தீர்க்கமாக விசாரணை நடக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. போலிஸார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

தொழிற்கட்சி சர்க்கார் மீது சர்ச்சில் பாய்ச்சல்

இந்திய சுதந்திரம்பற்றி வெட்டிப் பேச்சு

லண்டன், அக் 28

பிரிட்டிஷ் மனைனரின் பார்லிமெண்ட் பிரசங்கததைக் கண்டித்து இன்று பார்லிமெண்ட் எதிர்க்கட்சித் தலைவர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் மீண்டும பேசியபோது பிரிடடிஷ் தொழிற் கட்சி அரசாங்கத்தை பலமாகத் தாக்கினர். தொழிற் கட்சி அரசாங்கம் நிரவாகத் திறமையற்றதென்றும தவறான பாதையில் செல்வதாகவும கூறி, தான் முனனமே சொன்னதைக் கேளாது இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியதால் அங்கு லட்சக் கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதற்கு திரு மாரிசன் பதிலளிக்கையில் இந்தியாவின் கலகம் இயற்கையிலே மற்ற நாடுகளில் ஏற்பட்டது போலவே ஏற்பட்டுள்ளதென்றும் கூடிய விரைவில் அங்கு அமைதி ஏற்பட்டுவிடுமென்றும் சுதந்திரம் வழங்குவது சம்பந்தமாக இந்தியாவுக்கு திரு கிரிப்ஸை அனுப்பியவர் சர்ச்சில்தான என்றும் சுதந்திர மசோதா நிறைவேற்றப்படும்போது சர்ச்சில் துள்ளிக் குதித்து தமது ஆனந்தத்தைத் தெரிவித்தவர் என்றும் கூறினர்.

லார்டு சபை திருத்த மசோதாவை லார்டு சபை துரிதமாக நிறைவேற்றுவார்கள் என தான நம்புவதாகவும் தெரிவித்தார். (ராய்ட்டர்)

எலிஸபெத் இளவரசி திருமணச் செலவு

4500 பவுணே அரசாங்கம் செலவிடும்

லண்டன், அக் 29

இளவரசியின திருமணததை முனனிடடு நவம்பர் 20-ம் தேதி கொண்டாடடத்திற்கு பொது நிதியில் இருந்து 4500 ஸ்டெர்லிங்குகள்தான் எடுக்கப்படுமென்றும் மற்றச் செலவுகள் ராஜாங்கம் மன்னருக்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் பணத்திலிருந்து செலவு செய்யப்படுமென்றும் ஹோடர்ஸ்டன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ராய்ட்டர்)

ஜனநாயகத்தின் மீது பாய்ச்சல்

சீன அரசாங்க அடக்கு முறை

நாங்கிங், அக் 29

சீன மத்திய அரசாங்கம் ஜனநாயக லீக் என்னும் ஸதாபனததைச் சடடவிரோதமாக்கிவிடடார்கள். தேர்தலுக்கு முன் எல்லா எதிர்ப்பையும் பூண்டோடு ஒழிக்கவே இவ்வேலை செய்யப்படடிருப்பதாக லீக் அங்கததினர் ஒருவர் குறிப்பிடடார் 20 ஆயிரம் மெமபர்கள் இதில் இருப்பதாகவும் கம்யூனிஸடுகளிலும் பார்க்க இவாகள் கடினமாக நடததப்படலாம் எனவும அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கம் தடையை எதிர்த்து தனது அதிருப்தியை உணர்ததியிருக்கிறது.

பஸ் கம்பெனி ரூ 11,000 கொள்ளை வழக்கு

எட்டு எதிரிகள் கோர்ட்டில் ஆஜர்

கொழும்பு, அக். 29

இவ்வருடம் மே மாததில் ஹைலெவல் ரோட் பஸ் கம்பனி காரியாலயத்துள் புகுந்து ரூ 11000 கொள்ளையடித்தது சம்பந்தமாக கோர்ட்டில் எட்டுப்பேரை போலிஸார் ஆஜர் செய்தனர். அவர்களில் காராவும், எம். பியதாஸாவும் இருந்தனர். மேலும் இதுசம்பந்தப்பட்ட மூவரைக் கைதுசெய்ய வேண்டியிருக்கிறது அவர்களில் தப்பியோடிய கைதிகள் ஏ. டொன் சுகததாஸாவும், டபிள்யூ ஏ. டொன் சார்ளஸ் என்பவரும் என்று கூறப்படுகிறது. இவ்வழக்கு விசாரணை நவமபர் 11-ம் தேதிக்கு ஒததிவைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனும் பிரான்ஸும் அமெரிக்க சுருக்குக் கயிற்றில்:

மார்ஷல் திட்டம் ஐரோப்பிய அடிமைத் திட்டம்

அமெரிக்காவின் ஆதிக்க வேட்டைக்கு குறுக்கே நிற்கும் ரஷியா

வார்ஸா கமியூனிஸ்ட் மகாநாட்டில் ஜிடானேவ் அறிக்கை

வார்ஸாவில் நடைபெற்ற கமியூனிஸட் 'ஒன்பது தேச மகாநாட்"டிற்கு சோவியத் கமியூனிஸட்கட்சிக் காரியதரிசியான ஜிடானோவ் ஓர் அரசியல் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். அதில் சொல்லப்பட்ட விஷயங்கள் பற்றிய தகவல்கள் இபபோது வெளிவந்துளளது

திரு ஜிடானோவ் "ஏகாதிபத்திய, பாசிஸ எதிர்ப்புக் கொததளமாய் விளங்கும்" சோவியத ரஷியாவுக்கு எதிராக வெறி பிடிததராணுவம ஓட்டம பிடிப்பதாக அமெரிக்கா மீது குற்றம் சாட்டினர் "ரஷியாவின் தாககுதலென்ற கற்பனைக் கதைகளைபபோர்ததுக்கொண்டு தனது ராணுவக்கிற்கு அமெரிக்கா தளம தேடும்" முயற்சியைப் பலமாகக்கண்டித்து ஜெர்மனி, ஆஸடிரியா, இததாலி, கிரீஸ, துருக்கி, எகிபது, பாரசீகம், ஆபகானிஸதான், சீனு, ஜபான, இந்தியா முதலிய இடங்களில் அமெரிக்கா தனக்கேற்ற தளங்களைச் சிருஷடிக்க முயலவதாகவும் எடுத்துக் காட்டினர்.

சோவியத் லட்சியம்

அணுக்குண்டு பற்றி குறிப்பிடுகையில் சோவியததும் இதர புதிய ஜனநாயக நாடுகளும ஆயுதபரிஹரணம், அணுக்குண்டைத தடைசெய்தல் முதலியவற்றை லட்சியமாகக் கொண்டிருபபதாகக் கூறினர்.

மார்ஷல் திட்டம்

"மார்ஷல திட்டம்" ஐரோப்பாவை அடிமை கொளளும திடடம் என்றும் இததனைக தோல்வி அடையச் செய்ப ரஷியா எலல விதமுயற்சியையும எடுததுக கொளளும எனவும் அவர் தெரிவித்தார்.

"அமெரிக்க ராணுவ அரசியல் ஒற்றுவேலை புலி—, (பழய மாஸிஸ்தா அமெரிகக ஸதானிகர்) மட்டமான தொழிற்சங்கத தலைவர் கிரீன் [அமெரிக்க தொழிலாளர் பெடரேஷன்] முதலானிததுவததிற்கு வக்கலாததுக்குவாங்கி பேசும்பிளம தலைமையில் உள்ள பிரெஞ்சு சோஷலிஸடுகள், ஜெமன சமூக ஜனநாயகவாதி ஸகைமேஷர், பெவின் ரக பிரிடடிஷ் தொழிற்கட்சியினர்-எல்லாரும ஒத்துழைததது வருவதாகக் குறிபபிடடு தொழிற்கட்சி பிரிடடனும் சோஷலிஸட பிரான்சும அமெரிக்காவின பொருளாதாரச் சுருக்குக் கயிற்றில் தலையைக் கொடுததுவிடடன என்றும் அமெரிக்கத் திடடதில் இவ்விரு நாடுகளையும இரண்டாம ரக நாடுகளாகத தேடவுறுததுகொள்கை இருபதாகவும் ஜிடானோவ் குறிப்பிடடார்.

வழி மறிக்கும் ரஷியா

அமெரிககா உலகம் முழுவதையும் கட்டியாள முயற்சிகும் வேளையில் அசனது பாதையில் குறுக்கே நிற்பது ரஷியா என்றும், ரஷியாவே மார்ஷல் திடடதின் முகமூடியைக் கிழிததெறிந்தது என்றும் அவர் குறிபபிடடார் சோவியத ரஷியா இல்லாமலே ஐரோப்பாவில் உளள இதர சகதிகள் தீரமானததோடு வேலை செய்து இந்த அடிமைத் திடடததை நாசமாக்கிச் சீர்குலைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவரது அறிக்கை மேலும் கூறியதாவது:-

ரஷியாவுக்கும் ஐரோப்பிய தேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் வாததக ஒப்பந்தங்கள் இன்றைய கஷ்டமான பொருளாதார நிலைமையில் இருந்து தப்புவது எப்படி என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

அமெரிக்கக் கடன் மர்மம்

ஐரோப்பாவுக்கு அமெரிக்கா கடனுகத தனது பொருட்களைக் கொடுககிறது. கடனுகக் கொடுக்காவிட்டால் இந் நாடுகள் அப் பொருட்களை வாங்க மாட்டா அப்படி ஏறபடடால் அமெரிக்கப் பொருளாதார முறிவு இன்னும் அபாயகரமானதாகவும் விரைவிலும் வந்துவிடும்.

ஆகவே ஐரோப்பிய நாடுகள் உறுதிகொண்டு, அடிமைப் படுததும் கடன் திடடத்தை எதிர்த்து நின்றால், அமெரிக்காவை பின்வாங்கச் செய்ய முடியும்.

கமியூனிஸட் கட்சிகளின் செலவாகக இன்று கழக்கு ஐரோப்பாவில் மட்டுமல்ல; பாசிஸம் ஆட்சி செலுததும் எலலா நாடுகளிலும், ஜெர்மன் ஆக்கிரமிப்புககாளான பிரான்ஸ, பெல்ஜிம், ஹாலந்து, நார்வே, டென்மார்க், பினலாநது முதலான எல்லா நாடுகளிலும் இன்று அகிரித்து விடடது." [ராய்ட்டர்]

பிரெஞ்சு அசெம்பிளியில் கைகலப்பு

சோவியத் விரோதப் பிரசாரக் கூட்டத்திற்கு எதிர்ப்பு

பாரிஸ், அக் 28

பிரெஞ்சு தேசிய சபையில் இன்று பிரதமர் ராமடீர் பேசும்போது கமியூனிஸடுகள் பகுதியில் ஒரே அமைதி குலைந்து கொண்டிருந்தது. மற்றவர்கள் ஆரவாரித்து தமது ஆதரவைத் தெரிவித்தனர் டி கால் பார்லிமெண்டைக் கலைத்து புதிய தேர்தல் திட்டம் வேண்டுமென்று கோரவதைப்பற்றி 'இது வேண்டியாரின் விரோதிகளின் வாய்ச்சொல்லாய் இருந்திருக்கிறது' எனக் குறிபபிடடார். மார்ஷல் திடடததை வெகுவாக ஆதரித்தார்

கமியூனிஸட் தலைவர் ஜாக் கேஸ்டுகளோ மார்ஷல் திடடத்தால் பிரான்ஸ தனது சுதந்திர நிலையை இழந்துவிடும் என வாதித்தார் கமியூனிஸடுகட்சியைக் கலைக்கவிடவேண்டும் என்று பேசிய வலதசாரித் தலைவர் அன்ரோமட்டரை அவர் பலமாகக் கண்டித்தார்.

இதனால் கொதிப்புற்ற அன்ரோ மட்டர் தமது ஆசனத்தை விட்டெழுந்து மேடையில் இருந்த பேச்சாளரைத் தாக்குவதற்கு முயன்றார் இதற்கிடையில் 10 கமியூனிஸ்டுகள் பேச்சாளர் பக்கத்துக்கு விரைந்தனர். பின்னர் இருதரப்புக்கும் கைகலப்பு ஏற்பட்டது. பின்னால் இச் சண்டை ஒரு பார்லிமெண்ட் ஊழியரால் விலக்கப்பட்டது. அதன் பின் டுக்ளோ பேசுகையில் ராமடீர் "டி கால், வாஸ்ஸிரீட் விளையாட்டையே நடத்திச் செல்லுகிறார்" எனக் குறிபபிடடார்.

'சோவியததால் நசுக்கப்படுபவர்கள்" ஆதரவில் இன்று ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது இதன் பயனாக பல்லாயிரக் கணக்கான கமியூனிஸட் ஆர்ப்பாட்டக்காரர்கள் இக்கூட்டத்தை நிறுத்தும் நோக்கமாக குவிந்துவிட்டார்கள். கலவரங்களை ஒடுக்க 1500 ஆயுதக் துருப்புகளும ஆயிரம் போலிசாரும் வரவழைக்கப்பட்டனர். போலிசாருககும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் கைகலப்பு ஏற்பட்டு இருநூறு பேர் கைதுசெய்யப்பட்டார்கள். "பிரான்ஸின் தொழுனை சோவியக யூனியன் மீது வசைமாரி பொழிவார்கள் வாயை அடையுங்கள்' என்று துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்கபபட்டன "டி கால் ராமடீர் இருவரையும் சிறையில் தள்ளுக" என்றும் கோஷிகபபடடது. (ராய்ட்டர்)

தங்க பஸ்பம்

அமிர்தம் போன்ற ருசியும் குணமும் உள்ள சதாவரி லேயெக்தில் தங்க பஸ்பம் சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் இரத்த விருத்தி, சரீர புஷ்டி உண்டாகும். தேஜஸ, புத்திர சந்தானம் உண்டாகும். நீர்கோளாறுகள சுகமாகும். நரம்புகளுக்கு பலம், வாலிபம் உண்டாகும்.

40 வேளை (20-நாள்) தங்கபஸ்பம் ரூ 20—00
" " " சதாவரி லேயெம் ரூ. 3—00
வி. பி. செலவு ரூ 2-00 (கேட்லாக் இனாம்)

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, மதுரை (S. India.)

கிரவுன் தியேட்டர்

ஸகின்னர்ஸ் ரோடு
மருதானை

இன்று காண்பிக்கப்படுவது!
புத்தம் புதிய படம்!!
தினசரி மாலை 6-15 இரவு 9-30
சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு
சுவர்ணலதா-நஸீர் திறபபட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள்!

சிலோன் நியூஸ பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30 ம் தேதி இப்பததிரிகை 194 ஏ, தட்டாரததெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org